




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேத்துப்பட்டு சென்னை கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பில் 8.12.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு விளையாட்டுகளில் தேசிய அளவில் வெற்றி பெற்ற அப்பள்ளியின் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், எ.எம்.வி.பிரபாகர் ராஜா, பள்ளியின் தாளாளர் டாக்டர் ஜி.ஜே.மனோகர், தலைமை ஆசிரியர் ஜி.ஜெபதாஸ் தினகரன், முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார், அருண் மேமன் உள்பட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# ரூ.8.42 கோடியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

இராணிப்பேட்டை, டிச.10 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.12.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் மொத்தம் 8.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், பள்ளி கட்டடங்கள், புனரமைக்கப்பட்ட குளம் உள்ளிட்ட வளர்ச்சி திட்டப் பணிகளை திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சியில் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை எளிதில் வழங்குவதற்காக ரூபாய் 2.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 30 படுக்கைகள் மற்றும் நுழைவு கூடம், காத்திருப்பு கூடம், மருந்தகம், ஊடு கதிர் பிரிவு, ஸ்கேன், பிரசவ அறை, அறுவை சிகிச்சை அறை, பச்சிளம் குழந்தைகளுக்கான அறை, இரத்த வங்கி உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

மேலும் வாலாஜா அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 35.66 இலட்சம் ரூபாய் மற்றும் ROUND TABLE INDIA மூலம் 17.84 இலட்சம் ரூபாய் என மொத்தமாக 53.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடம், நகராட்சி இருபாலர் நடுநிலைப் பள்ளியில், பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கட்டடம், வாலாஜாபேட்டை நகராட்சி மார்கெட் நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கட்டடம் ஆகிய பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாலாஜா பேட்டை பேருந்து நிலையம் 2.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்து நிலைய மேற்கூரை இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட வாலாஜா பேட்டை பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள பூண்டி சாமியார் குளத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

துணை முதலமைச்சர் அவர்கள் மொத்தம் 8.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற வளர்ச்சி திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி லட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில் குமார், நகரமன்றத் தலைவர் திருமதி ஹரிணி தில்லை, துணைத் தலைவர்கள் கமல ராகவன், குல்ஜார் அஹமது மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.3531 கோடி

# 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள்!

## சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல்!

சென்னை, டிச. 10–

ரூ.3531.05 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டின் முதல் துணை மதிப்பீடுகளை நேற்று சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

அது வருமாறு:–

தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2024–25ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, 2024ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன் வைத்து பேசியதாவது:–

2024–25 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை முன் வைக்க இம்மாமன்றத்தின் விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான ஒரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 3,531.05 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2024–25ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் தாக்கல் வரவு–செலவுத் திட்ட செய்யப்பட்ட பிறகு ‘புதுப் பணிகள்’ மற்றும் ‘புது துணைப் பணிகள்’ குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.



தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு, ஒன்றிய அரசு வகுத்துள்ள வரைமுறைகளின்படி மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 0.50 சதவீதம் கூடுதல் கடன் பெறும் செயல்திறனுடன் மின்துறை இணைக்கப்பட்டுள்ள சீர்திருத்தத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி 1,634.86 கோடி ரூபாயை கூடுதல் நிதி இழப்பீட்டு மானியமாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் 1,500 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் விருப்ப ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு உரிய ஓய்வூதியப் பணப்பலன்களை போக்குவரத்து வழங்கிட, தமிழ்நாடு வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு 372.06 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.48 போக்குவரத்துத் துறை என்பதன்” கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதியச் சட்டம், 1954, 2024 ஆம் ஆண்டு சட்டம் எண்.6 மூலம் திருத்தம் செய்யப்பட்டு, எதிர்பாரா செலவு நிதி 150 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற்காக, துணை மதிப்பீடுகளில் 350 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண்.16– நிதித் துறை என்பதன்” கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு 70 கோடி ரூபாயை மானியமாக அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண்.8 பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) என்பதன்” கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2024 – 2025ஆம் முதல் துணை மதிப்பீடுகளை ஆண்டிற்கான இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

